செய்தி வெளியீடு எண்: 500 நாள் :17.09.2013

**பத்திரிக்கை செய்தி**

மத்திய அரசின், சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் (மாற்றுத் திறனாளிகள் நலன்) அமைச்சகத்தால், மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்கென சிறப்பாக செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள், மாற்றுத்திறனுடைய பணியாளர்கள் ஆகியோருக்கு தேசிய விருதுகள் 3.12.2013 அன்று புதுடெல்லியில் கீழ்குறிப்பிட்ட பிரிவுகளில் வழங்கப்படவுள்ளன.

1) மாற்றுத் திறனாளிகளில் சிறப்பாக பணிபுரிபவர்கள் / சுயதொழில் புரிபவர்கள் (Best Employees / Self Employed with disabilities) 2) சிறந்த பணியமர்த்தப்படும் அலுவலர்/ நிறுவனம், (Best Employers and Placement Officer or Agency) 3) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பாக சேவை புரிந்த தனிநபர் / நிறுவனம், (Best Individual and Institution working for the cause of persons with disabilities), 4) மாற்றுத் திறனாளிகளில் முன்னோடியாகத் திகழ்பவர்கள் (Role Model), 5) மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையிலான சிறந்த செயல்முறை ஆராய்ச்சி பணி/ தொழில் நுட்பம் அல்லது கண்டுபிடிப்புகளுக்கு (Best Applied Research or Technology Innovation / Product Development aimed at improving the life of persons with disabilities) 6) மாற்றுத் திறனுடையோருக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்திய சிறந்த பணிக்காக (Outstanding Work in the Creation of Barrier-Free Environment for the Persons with Disabilities) 7) மாற்றுத் திறனாளிகளுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்கிய சிறந்த மாவட்டம் (Best District in providing Rehabilitation Services) 8) தேசிய மாற்றுத் திறனுடையோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் திட்டத்தினை செயல்படுத்தும் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனம் (Best State Channelizing Agency of the National Handicapped Finance and Development Corporation) 9) சிறந்த படைப்பாற்றல் மிக்க மாற்றுத் திறனுடைய நபர்கள் (Outstanding

Creative Adult Persons with disabilities) 10) சிறந்த படைப்பாற்றல் மிக்க மாற்றுத் திறனுடைய குழந்தை (Best Creative Child disabilities) 11) சிறந்த பிரெய்லி அச்சகம் (Best Braille Press) 12) மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்தக்கூடிய சிறந்த இணையதளம் ( Best Accessible Website), 13) மாற்றுத் திறனாளிகளின் அதிகார பகிர்வினை ஊக்கப்படுத்தும் சிறந்த மாநிலம் ( Best State in promoting empowerment of persons with disabilities) மற்றும் 14) சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் (Best Sports persons with disabilities) ஆகிய 14 பிரிவுகளில் 58 தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள்/நிறுவனங்கள் இதற்கான படிவங்களை www.socialjustice.nic.in Scheme of National Awards 2013 என்ற இணையதளத்தில் இருந்து கீழிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம், கே.கே. நகர், சென்னை 78 ஆகியவற்றிலிருந்து பெற்று தக்க இணைப்புகளுடன் வருகிற 20.9.2013க்குள் 2 நகல்களில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் முதன்மைச் செயலாளர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கே.கே. நகர், சென்னை 600 078 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 20.9.2013க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்ற விவரம் தெவிக்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9